

# இலங்கை நூலகச்சங்கம் செய்திமடல்

Volume 37 Number 03 January – March 2021 ISSN 1391 -2531


## இலங்கை நூலகச் சங்கத்திற்கான அலுவலக யூரியுப் அலைவரிசை மற்றும் முகப் புத்தகம்

தகவல் மற்றும் பொது தொடர்பாடல் குழுவானது இலங்கை நூலகச் சங்கத்திற்கான யூரியுப் அலைவரிசை மற்றும் முகப் புத்தகம் ஒன்றினை உருவாக்கியதுடன் அதனை கடந்த மார்ச் 5ந் திகதி வெளியிட்டு வைத்தனர் யூரியுப்பிற்கான URL https://www.youtube.com/sllalk என்பதாகும். முகப் புத்தகத்திற்கான URL https://www.facebook.com/slla.lk சகல அங்கத்தவர்களும் இந்த அலை வரிசைகளி, னுடாக இந்த சமூக வலைத்தளங்களுக்கு வரவேற்கப்படுகிறார்கள்.




## SLLA பருவஇதழ் இப்போது SLJOL நிகழ்நிலையில்




இலங்கை நூலக சங்க மீளாய்வு இப்போது SLJOL நிகழ்நிலையில் வெளிவந்துள்ளது என்பதை அறிவிப்பதில் இலங்கை நூலகச் சங்கம் பெருமை கொள்கிறது. 2020 ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்த இதழ்களை இதில் பார்வையிட முடியும். மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொடரில் பார்வையிடவும். https://sllr.sljol.info/

## இலங்கை நூலக சங்க பரீட்சைகள் - 2020/2021

இலங்கை நூலகச் சங்கத்தின் 4வது பேரவைக் கூட்டத்தில் (2020/2021), சகல பரீட்சைகளையும் நிகழ்நிலையில் நடாத்துவது என முடிவு செய்யப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட தொற்று நோய் காரணமாக இவ்விடயம் இலங்கை நூலகச் சங்கத்தின் வரலாற்றில் முதல் தடைவ நடைபெற்ற விடயம் ஆகும். இதன்படி இலங்கை நூலகச்சங்கத்தின் 2020/2021ற்கான கல்விக் குழுவானது இப்பரீட்சைகளை குறிப்பிட்ட திகதிகளில் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. மேலும், இலங்கை நூலகச் சங்கத்தின் கல்விக் குழுவானது இப்பரீட்சைகளை வெற்றிகரமான முறையில் நடாத்தி முடிப்பதில் முழு ஆதரவை வழங்கியுள்ளது. இலங்கை நூலகச் சங்க அலுவலகமானது பரீட்சைகளை நடாத்துவதில் முக்கிய மையமாக விளங்கியது. அண்ணளவாக 700 மாணவர்கள் இப் பரீட்சைகளுக்கு தோற்றியிருந்நதனர்.

| | பரீட்சையின் பெயர் | நடைபெற்ற திகதிகள் |
|---|---|---|
| 1 | உயர் டிப்புளோமா - பகுதி 1 | 6 , 7 , 13 மாசி, 2021 |
| 2 | உயர் டிப்புளோமா-பகுதி 11 | 6 , 7 பங்குனி, 2021 |
| 3 | டிப்புளோமா | 20 , 21 பங்குனி, 2021 |
| 4 | நூலக தன்னியமாக்கல் (COLA) | 29 மார்கழி, 2020 |

## உள்ளே

இலங்கை நூலகச் சங்கத்திற்கான அலுவலக யூரியுப் அலைவரிசை மற்றும் முகப் புத்தகம் 01
இலங்கை நூலகச் சங்க பரீட்சைகள் - 2020/2021 01
இலங்கை நூலகசங்க மீளாய்வு இப்போது SLJOL நிகழ்நிலையில் 01
அம்சக் கட்டுரை: இலங்கையில் தகவல் அறிவை மேம்படுத்துவதில் பொது நூலகங்களின் பங்கு 02
தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு -2021 03
வருடாந்த பாடசாலை நூலக பயிற்சிப்பட்டறை 03
கலாநிதி பிரதீபா விஜேதுங்க - எமிரால்டின் தெற்காசிய நாடுகளிற்கான நூலக தகவல் விஞ்ஞான ஆராய்ச்சி விருது – 2020 04
வெளியீட்டுக் குழு 2020/2021 04
பொது நூலகர்களுக்கான நூலக முகாமைத்துவம் - பயிற்சிப்பட்டறை 04
சுன்னாகம் பொது நூலகம் 04
செய்தித் துணுக்குகள். தொகுதி சித்திரை – ஆனி 2021 04
இலங்கை நூலக சங்க பேரவை உறுப்பினர்கள் 2020/2021 04

*Sri Lanka Library Association, Organization of Professional Associations, Sri Lanka, 275/75, Stanly Wijesundara Mawatha, Colombo 07, Sri Lanka, Tel/Fax: +94-11-2589103, Email:info@slla.lk*

## இலங்கையில் தகவல் அறிவை மேம்படுத்துவதில் பொது நூலகங்களின் பங்கு

தொழிநுட்பத்தின் அதீத வளர்ச்சியின் காரணமாக தகவல்கள் உருவாகும் வீதம் அதிகரித்துள்ளது. இவ் அபரிமிதமான வளர்ச்சி தகவல் சுமையை உருவாக்குகின்றது. ஏனெனில் தகவல்கள் அதிவேகமாக வளர்ந்து வருகின்றதெனினும் அவற்றின் செல்லுபடியாகும் தன்மை, பொருத்தப்பாடு, நம்பகத்தன்மை கேள்விக் குறியாகவேயுள்ளது. எனவே இச்சவால்களை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு மூலோபாயத்தை சமூகம் உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கான மூலோபாயமாக உருவாக்கப்பட்ட கொள்கையே ‘தகவல் அறிவு’ (Information literacy) ஆகும். தகவல் அறிவு பற்றிய எண்ணக்கரு 1974 ஆம் ஆண்டு பால் சுர்கோவ்ஸ்கியால் (Paul Zurkowski) இனால் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. வளர்ந்து வரும் தகவல் சமூகத்தில் மக்கள் போட்டியிடின் அவர்கள் “தகவல் அறிவு” பெற்றவர்களாக மாற வேண்டிய அவசியத்தை அவர் கூறினார். தகவல் தேவையை இனங்காணலுக்கும் தகவலைக் கண்டறிவதற்கும் மதிப்பிடுவதற்கும் அதனைத் திறம்படப் பயன்படுத்தி பல்வேறு வடிவங்களில் ஏனையோருக்குக் கொண்டுசெல்வதற்குமான திறன்கள் தகவல் அறிவு எனப்படும் என அமெரிக்க நூலக அமைப்பு 1989ஆம் ஆண்டு வரையறை செய்தது. தகவல் அறிவென்பது டிஜிட்டல் உலகில் ஒரு அடிப்படை மனித உரிமையாகவும் சுயாதீனமான வாழ்நாட் கற்றலை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய திறன் ஆகவும் உள்ளது. அமெரிக்காவின் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நூலகங்களின் சங்கத்தின் (ACRL) தகவல் அறிவு நியமம் தகவற் கல்வி அறிவுள்ள ஒருவர் (Information Literate Person) பின்வரும் திறன்களைக் கொண்டிருப்பார் எனக் குறிப்பிடுகின்றது.

1. தனது தகவல் தேவையளவைத் தீர்மானிப்பார்
2. தேவையான தகவல்களைத் திறம்படக் கண்டறிவார்
3. தகவல்களையும், அதன் மூலங்களையும் தர்க்க ரீதியாக மதிப்பிடுவார்
4. பெறப்பட்ட தகவல்களைத் தன் அறிவுடன் இணைத்துக் கொள்வார்
5. தன்னுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தகவல்களைத் திறம்படப் பயன்படுத்துவார்
6. தகவல்களைப் பயன்படுத்துவதிலும், அதனைப் பெறுவதிலும் உள்ள சமூக, பொருளாதார, சட்டரீதியான விடயங்களை விளங்கிக் கொள்வார் (ACRL, 2000).

இலங்கையில் தகவல் அறிவு பற்றிய எண்ணக்கருத்தாக்கம் மிக சமீபத்தில் வெளிச்சத்திற்கு வந்தது. அதன் முதற்படியாக பல்கலைக்கழக பீடங்களில் பிரதானமாக நூலகர்களால் கற்பிக்கப்படும் ஒரு பாடமாக தகவல் அறிவுப் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை ஆசிரிய-நூலகர்களுக்கும் மற்றும் பாடசாலை நூலக ஊழியர்களுக்கு ஒரு சில தகவல் அறிவுப் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தாலும், பாடசாலைகளில் அதன் நடைமுறைப்படுத்தல் இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில் பாடசாலைகளில் இது இன்னமும் கட்டாயமாக்கப்படவில்லை. பொது நூலகங்கள் சமூகத்தின் அறிவு மையமாகவும், சாதி, மதம், வயது, பாலினம், மொழி மற்றும் கல்வி ஆகிய வேறுபாடுகள் இன்றி அனைவருக்கும் சேவையை வழங்குவதாலும், தகவல் அறிவை சமூகத்திற்கு அறிமுகப்படுத்தும் அடுத்த பெரிய பங்குதாரர் பொது நூலகங்கள் ஆகும்.

பொது நூலகத்தில் தகவல் அறிவை அறிமுகப்படுத்துவது தொடர்பான முதல் வினா ‘பொது நூலகம் தகவல் அறிவுப் பயிற்சிக்கு பங்களிக்க முடியுமா?’. ஆம் என்பதே இதற்கான பதில். யுனெஸ்கோ பொது நூலக உடன்படிக்கை தகவல் அறிவு தொடர்பான பொது நூலகங்களின் செயல்பாடுகளை பின்வருமாறு வரையறுக்கிறது:

1. தனிப்பட்ட ரீதியில் தன்னார்வமாக அல்லது சுய முயற்சியாக நடைபெறும் கல்வியையும், அதே போன்று முறைசார் கல்வியினையும், அவற்றின் எல்லா நிலைகளையும் ஆதரித்தல்.
2. தனிப்பட்ட படைப்பு வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை வழங்கல்.
3. குடிமக்களுக்கு அனைத்து வகையான சமூக தகவல்களையும் வழங்குதலை உறுதிசெய்தல்.
4. தகவல் மற்றும் கணினி அறிவு திறன்களை மேம்படுத்துவதற்கு வசதியை ஏற்படுத்தல்.
5. அனைத்து வயதினருக்குமான எழுத்தறிவு செயற்பாடுகளிலும் நிகழ்வுகளிலும் பங்குபற்றலும், அவற்றிற்கு உதவி புரிதலும். தேவையேற்படின் அத்தகைய திட்டங்களைத் தொடங்குதலும்.

பொது நூலகச் செயல்பாடுகளில் தகவல் அறிவுப் பயிற்சியை உள்ளடக்கவேண்டும் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. தகவல் அறிவு என்பது வாழ்நாட் கற்றலுக்கான திறன்களாகும், பொது நூலகங்கள் சமூகத்தின் வாழ்நாட் கற்றலுக்கான மையங்களாகும். இவ்விரண்டும் இணைக்கப்படும்போது, அவை மக்களிடையே திறன்களை அதிகரிப்பதன் மூலம் தகவல் அறிவுடைய சமூகம் உருவாகும். மேலும் சமூகத்திடையே தகவல் அறிவை ஊக்குவிப்பதில் பொது நூலகம் மற்ற நூலகங்களை விட பலம் வாய்ந்தது. அவ்வாறான பலங்களில் ஒன்று, பொது நூலகம் பாரம்பரியமாக ஒரு கற்றல் மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, எனவே வாசகர்கள் நூலகத்தில் ஒரு நம்பிக்கை கொண்டிருப்பர். பொது நூலகங்கள் ஏனைய பல்கலைக்கழக நூலகம் மற்றும் பாடசாலை நூலகத்தைப் போலல்லாமல் அனைத்து வகையான வாசகர்களுக்கும் பயிற்சிகளை வழங்கக் கூடியது. மற்றொரு பலம் எதுவெனில், வாசகர்களுடன் வாழ்நாள் முழுவதும் தொடர்பு கொள்ளக் கூடியது. இது நூலகர் மற்றும் வாசகர்களிடையே நீண்டகால உறவை போசிக்கிறது.

இரண்டாவது வினா என்னவென்றால், பொது நூலகம் சமூகத்தின் தகவல் அறிவு வளர்ச்சிக்கு எவ்வாறு பங்களிக்க முடியும்? உலகளாவிய ரீதியல் பொது நூலகங்கள் பல்வேறு வகையான தகவல் அறிவு சார் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. ஆயினும் அவை அனைத்தும் இலங்கைக்குப் பொருத்தமானதாக அமையாது. ஆகவே இலங்கைக்கு ஏற்ப தகவல் அறிவு சார் செயற்பாடுகளை உருவாக்க வேண்டும். பொது நூலகமென்பது பாரம்பரியமாக ஒரு தகவல்களின் தொகுப்பிடம் என்னும் ஒரு விம்பம் மக்களிடையே இருக்கும் போது, திடீரென அது ஒரு சமூக பயிற்சி மையம் எனும் புதிய விம்பத்தைத் தோற்றுவிப்பது சவாலான ஒன்று. இவ்வாறானதொரு மாற்றம் படிப்படியாக வர வேண்டும். இந்த உருமாற்றத்தின் சிறந்த தொடக்கப் புள்ளி பொது நூலகத்தினுள் போதுமான இணைய வசதியுடனான தகவல் தொழினுட்ப உட்கட்டமைப்புகளை உருவாக்குவதாலாகும். பொது நூலகம் இணைய வசதியை வழங்கும் இடமாக மாறும் போது நூலக வாசகர்கள் வெகுவாகக் கவரப்படுவர். குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், ஓய்வு பெற்றவர்கள் மற்றும் வயதானவர்கள் போன்ற பல்வேறு வாசகர்களுக்கு தகவல் தொழினுட்ப பயிற்சிக் கருத்தரங்குகளை நூலகம் தொடங்கலாம். வாசகர்களுடன் ஒரு தொடர்பைப் பேணுவதற்கும் நூலக பயிற்சிக் கருத்தரங்குகளை விளம்பரப்படுத்துவதற்கும் பொது நூலகங்கள் சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்தலாம் அல்லது அச்சிடப்பட்ட அறிவிப்புகளையும் வெளியிடலாம். தகவல் தொழினுட்ப கருத்தரங்குகளின் பின்னர் இணையத்தளத் தேடல், ஸ்மார்ட்போன்களில் உள்ள செயலிகளைப் பயன்படுத்தல் போன்ற பயிற்சிக் கருத்தரங்குகளையும் நூலகங்கள் தொடங்கலாம். மேலும் மின் புத்தகங்கள் (e-books) மற்றும் மின்-செய்தித்தாள்களின் (e-Newspaper) இணையதளங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் சமூக ஊடகங்களின் பாதுகாப்பான பயன்பாடு குறித்த அமர்வுகள் போன்ற இன்னோரன்ன தகவல் அறிவு சார்பான பயிற்சிகளை படிப்படியாக நடாத்தலாம்.

பொது நூலகங்கள் அண்மையிலுள்ள பாடசாலைகளுடன் சேர்ந்து மாணவர்களின் தகவல் அறிவை மேம்படுத்துவதற்கான நிகழ்வுகளை கூட்டாக நடாத்தலாம். நூலகங்கள் அருகிலுள்ள பாடசாலைகளை மாதமொரு முறையாவது தங்கள் தகவல் தொழினுட்ப வசதிகளைப் பயன்படுத்த அழைக்கலாம். ஏனெனில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் தகவல் தொழினுட்பம் ஒரு பாடமாக இருந்தாலும், ஒரு கணினி கூட இல்லாத பல பாடசாலைகளில் இலங்கையில் உள்ளன. இவ்வாறான பாடசாலைகளுக்கு நூலகங்கள் பேருதவியாக அமையும். இவ்வாறு மாணவர்கள் வருகை தரும்போது நூலகம் அவர்ளுக்கு ஒரு குறுகிய தகவல் அறிவுப் பயிற்சிக் கருத்தரங்கை நடாத்தலாம். பொது நூலகங்களுக்குரிய மற்றுமொரு வாய்ப்பு வாசிப்பு மாத நிகழ்வுகளாகும். இவ் வாசிப்பு மாத நிகழ்வுகளிலும் தகவல் அறிவுக் கருத்தரங்குகளை மேற்கொள்ள முடியும். தகவல் எழுத்தறிவின் அனைத்து விடயங்களையும் அண்மையிலுள்ள பாடசாலைகளுடன் சேர்ந்து மாணவர்களின் தகவல் அறிவை மேம்படுத்துவதற்கான நிகழ்வுகளை கூட்டாக நடாத்தலாம். நூலகங்கள் அருகிலுள்ள பாடசாலைகளை மாதமொரு முறையாவது தங்கள் தகவல் தொழினுட்ப வசதிகளைப் பயன்படுத்த அழைக்கலாம். ஏனெனில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் தகவல் தொழினுட்பம் ஒரு பாடமாக இருந்தாலும், ஒரு கணினி கூட இல்லாத பல பாடசாலைகளில் இலங்கையில் உள்ளன. இவ்வாறான பாடசாலைகளுக்கு நூலகங்கள் பேருதவியாக அமையும். இவ்வாறு மாணவர்கள் வருகை தரும்போது நூலகம் அவர்ளுக்கு ஒரு குறுகிய தகவல் அறிவுப் பயிற்சிக் கருத்தரங்கை நடாத்தலாம். பொது நூலகங்களுக்குரிய மற்றுமொரு வாய்ப்பு வாசிப்பு மாத நிகழ்வுகளாகும்.

இவ் வாசிப்பு மாத நிகழ்வுகளிலும் தகவல் அறிவுத் கருத்தரங்குகளை மேற்கொள்ள முடியும்.தகவல் எழுத்தறிவின் அனைத்து விடயங்களையும் பொது நூலகத்தால் பயனர்களுக்கு பற்சி அளிக்க முடியாது என்பது வெளிப்படையானது. எனினும் வழங்கப்பட்ட யோசனைகளால் பயனர்களுக்கு தகவல் அறிவின் அடிப்படையான தகவல் திறன்களை வழங்க முடியும். மூன்றாவது வினா யாதெனின், தகவல் அறிவு நிகழ்வுகளை நடாத்துவதற்கு பொது நூலகங்களுக்குக் காணப்படும் இடர்பாடுகள் யாவை? ஏன்பதாகும். இடர்பாடுகள் பற்றி சிந்தித்தால் தான் அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். முதன்மையான இரண்டு இடர்பாடுகள் பல பொது நூலகங்களுக்கான தகவல் தொழினுட்ப வசதிகள் இன்மை, மற்றும் நூலகர்களுக்கான தகவல் அறிவுப் பயிற்சியின்மை என்பனவாகும். இது தவிர, நூலகர்கள் தங்களது பாரம்பரியமான தொழிற்பாடுகளை மாற்றிக்கொள்வதற்கான தயக்கம், மக்களிடையே பொது நூலகத்தின் செயல்பாடு குறித்து குறைவான மதிப்பீடு மற்றும் தகவல் அறிவு தொடர்பான நேரான மனப்பாங்கு இன்மை ஆகியனவும் பொது நூலகத்தில் தகவல் அறிவுச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறான திட்டங்களில் பொது நூலகங்கள் ஈடுபடுவதற்கு ஊக்கம் வழங்குவதிலும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் உளளூராட்சி நிறுவனங்களுக்கு குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. மேலும் நூலகர்கள் தற்கால உலகின் போக்குக்கு ஏற்ப தங்களது திறன்களை மேம்படுத்திக் கொள்ளவேண்டிய தேவை உள்ளது. அதேபோன்று பொது நூலகங்களில் புதுமையான சேவைகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.




திரு.செ.சாந்தரூபன்
சிரேஷ்ட உதவி நூலகர்
கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை



## தேசிய நூலக தகவல் விஞ்ஞான நிறுவனத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு -2021





சிறந்த ஆய்வு சமர்ப்பணத்திற்கான விருது ஒருங்கிணைந்த நூலக முறைமைகள் - கண்டுபிடிப்பு இடைமுகம் (ILS -DI) : தகவல் கண்டுபிடிப்பு பயன்பாடுகளுடன் நிகழ்நேர இணைப்புக்கான ஒரு நிலையான கட்டமைப்பு எனும் தலைப்பில் ஆய்வினை சமர்ப்பித்த கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு.எம்.ஜெயக்காந்தனுக்கு வழங்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தேசிய நூலக மற்றும் தகவலட விஞ்ஞான நிறுவனத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு கடந்த ஜனவரி மாதம் 23ந் திகதி நிகழ்நிலையில் இடம்பெற்றது. தகவல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கத்தின் தெற்காசியப் பிரிவு இந்நிகழ்வை ஏற்பாடு செய்வதில் கூட்டுச் சேர்ந்தது. கலாநிதி ருவான் கமகே - தற்காலிகப் பணிப்பாளர் மற்றும் பகத்தி காலா, தெற்காசிய பிரிவின் தலைவர் (ASIS &T) ஆகியோர் இக்கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினர். இக்கருத்தரங்கின் முக்கிய கருப்பொருள் “ புதிய இயல்பான சூழ்நிலையில் நூலகங்களுக்கான சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள்” ஆகும். அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழக தகவல் தொடர்பு பாடசாலையைச் சேர்ந்த கலாநிதி பூவா நாராயண் இந்த முக்கிய உரையை நிகழ்த்தினார்.ஆறு அமர்வுகளில் ஐம்பத்து நான்கு (54) சுருக்கங்கள் வழங்கப்பட்டன. அமர்வுகளாவன : நூலகவியல், தகவல் றெிவு, தகவல் வளங்களும் சேவைகளும், தகவல் தொழில்நுட்பமும் புதிய போக்குகளும், கற்றலும் கொவிட்-19ம் மற்றும் நூலகங்களை எவ்வாறு கொவிட் 19 தாக்கியது என்பவையாகும்.ஆய்வு சமர்ப்பணம் மற்றும் சிறந்த மாணவர் ஆய்வுச் சமர்ப்ணம் என்பவற்றிற்கான விருதுகள் அமர்வுகளிற்குத் தலைமை தாங்கியவர்களின் சராசரி மதிப்பீடுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டன.





இந்த ஆய்வு நிகழ்வில் சிறந்த மாணவர் ஆய்விற்கான விருதை “ மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது நூலகங்களின் மனிதவள வளத்தின் தற்போதைய நிலை” எனும் தலைப்பில் வழங்கிய இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி. ஜே.லாவண்யா அவர்களுக்கு வழங்கப்பட்டது. துணை ஆய்வாளராக ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜீ.டீ.எம்.என். சமரடிவாகர அவர்கள் செயற்பட்டார்

## வருடாந்த பாடசாலை நூலக பயிற்சிப்பட்டறை



இலங்கை நூலகச் சங்கத்தின் பாடசாலை நூலகக் குழுவினால் வருடாந்த பாடசாலை நூலகப்பட்டறை கடந்த மார்ச் மாதம் 29ந்திகதி கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிப்பட்டறையில் மேல்மாகாணத்தில் உள்ள தேசியப்பாடசாலைகள் மற்றும் மாகாண நூலகங்களில் உள்ள நூலகர்கள், ஆசிரிய நூலகர்கர்கள் மற்றும் நூலகர்கள் பங்குபற்றினர். புாடசாலை நூலகக்குழு அமைப்பாளர் திருமதி ஆர்.சி. குசுமாஞ்சலி வரவேற்புரையை நிகழ்த்தினார். கலரநிதி ருவான் கமகே – தலைவர் இலங்கை நூலகச் சங்கம், அவர்கள் நூலகச்சங்கத்தின் பங்கு பற்றி விளக்கினார்.. கே.ஆர்.என். ஹர்சனி- செயலாளர் இலங்கை நூலகச் சங்கம் முக்கிய உரையை ஆற்றினார். பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் திரு. தேனபடு பாடசாலை நூலக கற்றல் வள நிலையத்தின் வழிகாட்டிகளின் உள்ளடக்கங்கள் பற்றி விளக்கினார்.











## முன்னாள் SLLA தலைவரும் கொ/பல்கலைக்கழக நூலகருமான கலாநிதி பிரதீபா விஜேதுங்க எமிரால்டின் தெற்காசிய நாடுகளிற்கான நூலக தகவல் விஞ்ஞான ஆராய்ச்சி விருதினைப் பெற்றுக் கொண்டார்



நூலக தகவல் விஞ்ஞான துறையில் கலாநிதி அனில் குமாரின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பை கௌரவித்து நினைவு கூருமுகமாக எமிரால்ட் நிறுவனம் நூலக தகவல் விஞ்ஞான விருதை அர்ப்பணித்துள்ளது. தனக்குப் பின்னுள்ள பல எதிர்கால தலைமுறையினரால் நினைவுகூரப்படக்கூடிய பல சிறந்த விடயங்களை அவர் விட்டுச் சென்றுள்ளார். அவரை நாம் இழந்து விட்டோம். எமிரால்ட் நிறுவனம் 2000 இங்கிலாந்துப் பவுண்களை வெற்றி பெறும் ஒரு ஆராய்ச்சித் திட்டத்திற்கு நிதி உதவியாக அல்லது ஒரு பகுதியாக வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறது..

இந்நிதிக்குரிய 2020ஆம் ஆண்டிற்குரிய வெற்றியாளராக கலாநிதி பிரதீபா விஜேதுங்க, நூலகர், கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் சமர்ப்பித்த தலைப்பு " இலங்கை அரச பல்கலைக்கழக நூலகங்களில் கொவிட்-19 இனால் நிகழ்நிலை வழிக் கற்றலின் பின்னரான நூலக சேவைகளை நிலை நிறுத்தலும் பல்கலைக்கழகம் எதிர்நோக்கும் வாய்ப்புக்களும் சவால்களும்" என்பதாகும்.

### பொது நூலகர்களுக்கான நூலக முகாமைத்துவம் - பயிற்சிப்பட்டறை

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் நிலையம் " நூலக முகாமைத்துவம் எனும் தலைப்பில் மட்டக்களப்பு மாவட்ட பொதுநூலகர்களுக்கான ஒரு பயிறசிப்பட்டறையை பெப்ரவரி 24-25ந் திகதகளில் கொழும்பு தேசிய கல்வி நிறுவகத்தில் ஒழுங்கு செய்திருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 30 ற்கு மேற்பட்ட பொது நூலகர்கள் இதில் பங்கு கொண்டனர்.







### சுன்னாகம் பொது நூலகம்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் நிலைய அதிகாரிகள் சிலர் சுன்னாகம் பொது நூலகத்திற்கு கடந்த தை மாதத்தில் வருகை தந்திருந்தனர்











சுன்னாகம் பொது நூலகம் கடந்த மார்ச் 5ந் திகதி ஆயர்வேதமும் பெண்களும் எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியிருந்தது இக்கருத்தரங்கிற்கு வளவாளராக வைத்தியர் திருமதி. ஜே. ரத்னாலகி பங்குபற்றியிருந்தார். நூலகத்திற்கு வரும் பெண் பாவனையாளர்கள், பொது உத்தியோகத்தர்கள் மற்றும் சுன்னாகம் பிரதேச சபை பெண் ஊழியர்கள் என 50ற்கு மேற்பட்டோர் இதில் பங்குபற்றியிருந்தனர்.

### செய்தித் துணுக்குகள். தொகுதி சித்திரை – ஆனி 2021 2021

உங்களுடைய நூலகங்கள் தொடர்பான அனுபவங்கள், நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளை தொடர்ந்து வெளியிடவுள்ள செய்திமடலில 37(4)ல் பிரசுரிப்பதற்கு அனுப்பி வையுங்கள். இதன் நோக்கம் எமது உறுப்பினர்களிடையே அவற்றை பரப்புவதும் பரிமாறுவதுமாகும். உங்கள் செய்திகளை MS word கோப்பில் பதிவு செய்து பின்வரும் ஏதாவது ஒரு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் sritharan@lib.cmb.ac.lk or sllapublicationofficer@gmail.com

### இலங்கை நூலகச் சங்க வெளியீட்டுக் குழு 2020/2021

**பிரதான குழு**

தயானந்தி. சிறீதரன் (வெளியீட்டு அலுவலர்) சந்திமா வதசிங்க
கோமதி முருகதாஸ் பீ.என். ஜீ. எஸ் பிரேமரத்ன
ஏம்.எஸ்எம் ஷிஹாம் ஏ.வீ.எம்.கே. அன்கும்பர
பவிதாரா விஜயவர்தன

**செய்திமடல் - உப குழு**

திருமதி த. சிறிதரன் திருமதி கயனி பெரேரா
திருமதி. கே முருகதாஸ்

**பருவ இதழ் - உப குழு**

திருமதி த. சிறிதரன் பீ.என். ஜீ. எஸ் பிரேமரத்ன
சந்திமா வதசிங்க எஸ். நவநீதகிருஸ்ணன்

### இலங்கை நூலக சங்க பேரவை உறுப்பினர்கள் 2020/2021

**தலைவர்:** கலாநிதி. ருவான் கமகே
**உடனடி கடந்த கால தலைவர்:**கலாநிதி.(திருமதி).என்.டீ.விஜயசுந்தர
**தேர்வு செய்யப்பட்ட தலைவர்:** கலாநிதி. ஆர்.டீ.ஆனந்த திஸ்ஸ
**உப தலைவர் :** திரு. அன்ரன் நல்லதம்பி
**காரியதரிசி:** கலாநிதி. திருமதி. கே.ஆர்.ஏ.என்.ஹர்ஷினி
**உதவிக் காரியதரிசி:** : திருமதி. பிரியதர்ஷினி ஹேமகுமார
**பொருளாளர்:** திருமதி. வருணி கல்லபடாராட்சி
**கல்வி அலுவலர்:** கலாநிதி. செல்வி. சம்பா அளஹக்கோன்
**உதவி கல்வி அலுவலர் :** திருமதி. பிரியானி பாலசூரிய
**வெளியீட்டு அலுவலர்:** திருமதி. த .சிறீதரன்
**தகவல் மற்றும் பொது தொடர்பாடல் அலுவலர்:** கலாநிதி. எஸ்.கே. இலங்கரத்ன

**தொழில்வாண்மை சார் குழுக்கள்**

**கல்விசார் நூலகங்கள்:** திரு. நோமன் ரவிக்குமார்
**கொமெஸ்ப் :** திரு.எஸ். சாந்தரூபன்
**அரச நூலகங்கள்:** திருமதி. யானிகா நந்தசேன
**தேசிய நூலகம்:** திரு. விஜய பிரேமதர்ஷன
**மாகாண நூலகங்கள்:** திருமதி. வஸந்தா குருப்பு
**பொது நூலகங்கள்:** திரு தம்மிக வீரக்கோன்
**விசேட நூலகங்கள்:** திருமதி. ரஞ்சனி ஹேரத்
**பாடசாலை நூலகங்கள்:** திருமதி. சந்திமா திஸநாயக்க

**பரிந்துரைக்கப்பட்ட சபை உறுப்பினர்கள்:**

1. திருமதி. சிவந்தி வீரசிங்க
2. திரு. லால் பன்னிலா

**பரிந்துரைக்கப்படட நிருவாக்குழு உறுப்பினர்கள்:**

1. திருமதி. சுனேத்ரா பெரேரா
2. செல்வி. ருக்மலி சேபாலிகா

**If undelivered please return to:**

Sri Lanka Library Association,
OPA Center,
275/75, Stanly Wijesundara Mawatha,
Colombo 07.

**To:**